## தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுகிறார்!

# தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக உருவாக்குகிறார் முதல்வர்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்தநாள் விழாவில் நடிகர் விஜயகுமார் புகழாரம்!

சென்னை, மார்ச் 24-

**சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவில் நடிகர் விஜயகுமார் உரையாற்றுகையில் “தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுகிறார் நமது முதல்வர் என்றும் தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக உருவாக்கு கிறார் முதல்வர்” என்றும் பெருமிதத்துடன் தெரிவித்திருந்தார்.**

இது குறித்து நடிகர் விஜயகுமார் பேசியதாவது:

பெரும் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அறநிலையத் துறை அமைச்சர் அருமைச் சகோதரர் சேகர்பாபு அவர்களே,

மக்கள் முதல்வர் மனிதநேய விழாவிற்கு வருகை தந்துய சிறப்புரையாற்றிய முத்துக்குமார் அவர்களே, சிநேகன் அவர்களே, மீரா நாகராஜன் அவர்களே, இன்னும் இங்கே உரையாற்றவிருக் கின்ற குன்றக்குடி அடிகளார் அவர்களே,

இந்தத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பி னர்களே, கழகத்தின் பொறுப்பாளர்களே, இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கின்ற பெரியோர் களே, தாய்மார்களே, பத்திரிகை நண்பர்களே, தொலைக்காட்சி நண்பர்களே, உங்கள் அனைவ ருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விழாவில், எனக்கு முன்பாக உரை யாற்றிய சிநேகன் அவர்கள், வள்ளுவரைப்பற்றி, கலைஞரைப்பற்றி, இன்றைய தமிழக முதல்வர் நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தளபதி அவர்கள்குறித்து, மிக அழகாக, தெளிவாக ஆக்ரோசமாகப் பேசினார்.

திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுகின்றவர், அதே குறளில்,

“இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.“

யார் எந்தத் தவறு செய்தாலும் மன்னிப்பு; நாங் கள் நல்லதைத்தான் நினைப்போம்; நல்லததைத் தான் செய்வோம் என்ற ஒரே முதல்வர் நம்மு டைய தளபதி அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்களைப்பற்றிச் சொல் லவேண்டும்; மேயர் பிரியாவைப்பற்றி சொல்ல வேண்டும்.

### தமிழ் மகள் நிகழ்ச்சி!

இந்தக் கிழக்கு மாவட்டத்தில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும், அதை மிகச் சிறப்பாக நடத்தி, மக்க ளுக்குச் செய்யவேண்டிய நன்மைகளையும் செய்யக்கூடிய இரண்டு பொறுப்பாளர்கள் இருக்கிறார்கள்.

நேற்றைய தினம் நடந்த சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற தமிழ்மகள் நிகழ்ச்சியில், நம் முடைய சிநேகன் அவர்கள் சொன்னதைப்போல, 2 ஆயிரம் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற சிறப் பான ஒரு நிகழ்ச்சி நடந்ததாகக் கேள்விப்பட்டேன்.

அதேபோல, இந்தப் பகுதியில் உள்ள அனை வருக்கும் உணவை அளிக்கின்ற ஒரு சிறப்பான 365 நாள்கள் நிகழ்ச்சியையும் அமைச்சர் அவர் கள் இங்கே நடத்திக் கொண்டிருக்கின்றார். இது தமிழக முதல்வருக்கு, நம்முடைய அருமைச் சகோதரர் செய்கின்ற அருமைப் பணி, பெருமை என்றுதான் சொல்லவேண்டும்.

கலைஞர் அவர்களுக்கு நேரு ஸ்டேடியத்தில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் உரை யாற்றினார்.

இங்கே விஜயகுமார், மக்கள் முதல்வரைப் பாராட்டுவதைவிட, நடிகர் திலகமாக இருந்தால், அவர் எப்படியெல்லாம் பாராட்டி இருப்பார் என்று நினைத்துப் பார்க்கின்றேன்.


அன்றைக்கு நடிகர் திலகம் அவர்கள், நம்மு டைய தலைவர் கலைஞரைப் பார்த்து, “எதைச் செய்வதய்யா, தஞ்சாவூரில் கோவில் குளத்துக் கரையில் நாம் அமர்ந்துகொண்டு, சென்னைக்கு எப்படிச் செல்வோம் என்று துடித்துக் கொண்டிருப் போமே, அதைச் சொல்வதா?

கையில் காசில்லாமல், என்னுடைய நண்பர் கலைஞர் அவர்கள் தன்னுடைய மோதிரத்தை அடகு வைத்து, நாம் இருவரும் சென்னைக்கு வந் தோமே அதைச் சொல்வதா? என்று பேசினார்.

### மக்களுக்காகப் பாடுபடும் முதல்வர்

அதேபோன்று, நடிகர் திலகம் அவர்களாக இந்த மேடையில் இருந்தால், என்ன சொல்லியி ருப்பார் என்றால், “என்னுடைய நண்பர் தலை வர் கலைஞருக்குப் பிள்ளையாகப் பிறந்து, இன் றைக்கு இந்த அளவிற்கு வளர்ந்து மக்களுக்காகப் பாடுபடுகின்றாயே, அதைப் பாராட்டுவதா? எதைச் சொல்வதய்யா?

பள்ளிப் பருவத்திலிருந்தே கட்சியில் தொடர்பு கொண்டு, அடிமட்டத் தொண்டராகவே தன்னை ஒரு தொண்டனாகவே நினைத்து,



கலைஞருடைய பிள்ளையாக நினைக்காமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டனாக, உடன்பிறப்பாக இருந்து, வளர்ந்து, திராவிட முன் னேற்றக் கழகத்தில் இளைஞரணியில் பொறுப் பேற்று வீறுநடை போட்டு, தமிழக இளைஞர் களை ஒன்று சேர்த்தீர்களே, அதைச் சொல்வதா?

அதன்பிறகு, சென்னை மாநகரத்திற்கு மேய ராக வந்து, சிங்காரச் சென்னையாக ஆக்கி, பல பாலங்களைக் கட்டி, போக்குவரத்து இடையூறு ஏற்படாமல் செய்தீர்களே அதைச் சொல்வதா?

எதைச் சொல்வதய்யா?

அதுமட்டுமல்ல, தலைவருடைய ஆட்சியில், நீங்கள் அமைச்சராக இருந்து, அவருக்கு உறுது ணையாக இருந்து, ஏற்ற பொறுப்பை சிறப்பாகச் செய்தீர்களே அதைச் சொல்வதா?

துணை முதலமைச்சராக இருந்து, தலைவ ருக்கு நீங்கள் பக்கபலமாக இருந்தீர்களே, அதைச் சொல்வதா?

### காலை உணவுத்திட்டம் மகத்தான திட்டம்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாதபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, கேள்வி கேட்டபோது, உங்களை வெளியில் அனுப்பி சட்டையைக் கிழித்தார்களே, அப்போதும் எதையும் தாங்கும் இதயம் - அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியைப் போல துணிந்து பாடுபட்டீர்களே, அதைச் சொல்வதா?

எதைச் சொல்வதய்யா?

அதற்குப் பிறகு, 2021 ஆம் ஆண்டு நடை பெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில், கூட்டணிக் கட்சிகளை ஒன்றிணைத்து, தலைவருடைய உடன்பிறப்புகளை ஒன்று சேர்த்து, சட்டப்பேர வைத் தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சியைப் பிடித்து, முதல்வரானீர்களே, அதைச் சொல்வதா?

எதைச் சொல்வதய்யா?

நீங்கள் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக் குறுதிகளில் ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். சொல்லாததையும் செய்து கொண்டிருக்கிறீர்கள். மகளிருக்குப் பேருந்தில் இலவசப் பயணம்.

இதுவரையில், தமிழ்நாட்டில் மதிய உணவுத் திட்டம் மட்டும்தான் இருந்தது. நீங்கள் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்களே அதைச் சொல்வதா?

எதைச் சொல்வதய்யா?

நீங்கள், இந்தத் தமிழுக்காகவும், தமிழ்நாட்டிற் காகவும், தமிழ் மக்களுக்காகவும் செய்த அத் துணை தியாகங்களையும், சிறப்புகளையும் நிச் சயமாகத் தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள்.

போற்றுபவர்கள் போற்றட்டும்; தூற்றுபவர்கள் தூற்றட்டும். தூக்கி எறிந்துவிடுங்கள்.

நான் உரையாற்றத் தொடங்கும்போது ஒரு குறளைச் சொன்னேன்,

“இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.“

நம் குறிக்கோள் எல்லாம், மக்கள் நன்றாக இருக்கவேண்டும்; தமிழ்நாடு நன்றாக இருக்க வேண்டும்; தமிழ் வாழவேண்டும்.

இது தாய் நாடு; தமிழ்நாடு. இங்கே தமிழ் மொழிதான் முதல். அதற்குப் பிறகுதான் மற்ற மொழிகள் எல்லாம்.

ஆங்கிலமாக இருக்கட்டும்; கன்னடமாக இருக் கட்டும்; தெலங்காக இருக்கட்டும்; மலையாளமாக இருக்கட்டும்; இந்தி மொழியாக இருக்கட்டும்; உருது மொழியாக இருக்கட்டும்.

ஆனால், இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், 2026 ஆம் ஆண்டு வரப் போகின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பார்த்துக் கொள்கி றோம் என்று.

நான், பொதுமக்களில் ஒருவனாக இருப்பதால் சொல்கிறேன், “நீங்கள் அடுத்த முறை எதிர்க்கட்சி யாகக் கூட வர முடியாது.

நீங்கள் எழுதி வைத்துக்கொள்ளுங்கள், நான் சொல்கிறேன்! 2026 இல் நீங்கள் ஆட்சிக்கு வந்து, தி.மு.க.வினர்மீது நடவடிக்கை எடுப்போம் என்று நினைக்கிறீர்கள். உங்கள்மேல்தான் நட வடிக்கை எடுக்கப்படும். அதற்குக் காலமும், நேர மும் வெகுதூரம் இல்லை.

### தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு!

ஆகவே, தமிழுக்காகவும், தமிழ்நாட்டிற்காக வும் உழைத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற தளபதியார் அவர்கள், என்றைக் கும் தமிழகத்திற்கு முதல்வர் அவர்தான்.

தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்று சொல்வார்கள்.

ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்க ளுக்குப் பிறந்திருக்கின்ற பிள்ளை உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 32 அடி பாய்வார்.

பார்ப்பதற்கு சின்னப் பையனாக இருக்கிறாரே என்று யாரும் நினைக்கவேண்டாம். தமிழ் மக் களை, தமிழ்நாட்டை எப்படிக் காப்பாற்ற வேண் டும் என்ற ஒரு முடிவோடு இருக்கிறார்.

எதிர்காலத்தில் முதல்வர் அவர்தான்.

அதிலொன்றும் சந்தேகமேயில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, தமிழ்நாட்டில் வேறு எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வர முடியாது.

ஏனென்றால், மக்களுக்கு இதைவிட வேறு என்ன செய்ய முடியும்? செய்யவேண்டியதை யெல்லாம் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

கடன் வாங்குகிறீர்களே என்று சொல்கிறார்கள். கடன் வாங்காமல் என்ன செய்ய முடியும்? வரி போட்டால், ஏன் வரி போடுகிறீர்கள்? என்று கேட் கிறீர்கள்.

இதையெல்லாம் சமாளிப்பார். தமிழகத்தைச் தலைசிறந்த மாநிலமாக நிச்சயமாக நம்முடைய தளபதி அவர்கள் உருவாக்குவார்.

அவர் பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு நடிகர் விஜயகுமார் உரையாற்றினார்.

---

## மிகவும் பின்தங்கிய மாவட்டமான

# கடலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்திட அரசு பரிசீலிக்கும்!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 24-

சட்டப்பேரவையில் கடலூர் தொகுதி கழக உறுப்பினர் கோ.ஐயப்பன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அளித்த பதிலும் வருமாறு:-



**கோ. ஐயப்பன்:** (அ) கடலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன்:** (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது குறித்து கடந்த 29-5-2018 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப் பட்ட அறிவிப்பின்படி, அம் மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அங்கு போதிய சாத் தியக்கூறுகள் இல்லாததால், அத்திட்டம் அராசணை (நிலை) எண் 11, தகவல் தொழில்நுட்பவியல் (B3) துறை, நாள் 20-9-2019-ன்படி கைவிடப்பட்டது. அதாவது இரண்டும் கடந்த ஆட்சியில் கைவிடப்பட்டது. இருப்பி னும், கடலூருக்கு அருகில் உள்ள சோழிங்கநல்லூர், ELCOSEZ பூங்காவில் 377 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகி றது. அதில் Wipro நிறுவனம் 72 ஏக்கர், HCL Technologies Limited 45 ஏக்கர், Mahindra Private Limited 45 ஏக்கர் Cognizant Technology Solutions India Pvt Ltd 18 ஏக்கர், Ford Motors Pvt Ltd 25 ஏக்கர் மற்றும் Sutherland Global Services 13.5 ஏக்கர் இடத்தில் சுமார் 68,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், வளர்ந்துவரும் தக வல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில், 2.33 இலட் சம் சதுரடி பரப்பளவில், இதே பூங்காவில் ஒரு புதிய கட்ட டம் கட்டி முடிக்கப்பட்டு, விரைவில் திறக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். மேலும், எதிர்காலத் தில் கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்திட தேவை ஏற்படின், சாத்தியக்கூறுகளின் அடிப்ப டையில் அரசு அதனைப் பரிசீ லிக்கும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

**கோ. ஐயப்பன்:** கடலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இந்த மாவட்டத் தில் பல்வேறு பொறியியல் கல் லூரிகளிலும், அரசு கலை அறி வியல் கல்லூரிகளிலும் மாணவ, மாணவியர்கள் பயின்று வருகி றார்கள். அவர்கள் கல்லூரி படிப்பை முடித்தவுடன் வேலைத் தேடி சென்னை, பெங் களூர் போன்ற இடங்களுக்குச் சென்று, ரூ.20 ஆயிரம், ரூ.30 ஆயிரம் என்று மிகவும் குறை வான வருமானத்திலே, அங்கே தங்கி மிகவும் சிரமத்திற்குள் ளாகி பணிபுரிந்து வருகிறார் கள். மாவட்டத்தின் தலைநக ரான கடலூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு அலுவலகங் கள் தவிர படித்து முடித்த இளைஞர்கள் தொழில், வேலைவாய்ப்பைப் பெறுவ தற்கான எந்தச் சூழலும் இல்லை. கடல்வழி மார்க்கம், தரைவழி மார்க்கம், வான்வழி மார்க்கம் என்று பல்வேறு நிலையிலே அனைத்து வசதிக ளும் இருக்கின்றன.

இங்கு நிலத்தடி நீரும், நீர்வ ளமும் நல்ல நிலையில் இருக்கி றது. படித்த மாணவர்களுக்கு குறைந்த வருமானம் இருந்தா லும்கூட இங்கு பெரிய TIDEL பூங்காக்கள், அமைச்சர் அவர் கள் தெரிவித்ததுபோன்று பெரிய அளவில் இல்லையென் றாலும்கூட சிறிய அளவிலா வது சுமார் 500 மாணவ, மாண வியர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் விதமாக mini TIDEL பூங்காவை அமைத்து மாவட்டத்தின் தலைநகரம் கடலூர் சட்டமன் றத் தொகுதியில் எதுவும் இல் லையென்ற குறையை நிவர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங் கள் வாயிலாகக் கேட்டு அமர் கின்றேன்.

**அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன்:** இங்குள்ள உறுப்பினர்கள் பலர் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை விடுத்துள்ளதால், ஒரு விளக் கம் அளிக்க நான் கடமைப்பட் டிருக்கிறேன். ஒன்றிய அரசாங் கத்தில் இந்தத் துறையின் பெயர் MeitY (Ministry of Electronics and Information Technology), ஆந்திராவில், தெலங்கானாவில், கேரளாவில் அதே போன்று Department of Electronics and Information Technology, கர்நாடகாவில் Department of Electronics, Information Technology, Biotechnology, and Science & Technology (E, IT, BT & S&T) எனவே அனைத்து துறைகளும் உள்ள டக்கியதாக இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் முத லில் TIDEL துவக்கும்போது, தலைவர் கலைஞர் அதற்கு துறை அமைச்சராக இருந்து ELCOT மூலம் துவக்கப்பட்டதே தவிர, இன்றைக்கு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் ELCOSEZ மட்டும்தான் தகவல் தொழில்நுட்பத் துறையில் இருக்கிறது. மீதமுள்ள, TIDEL, Neo TIDEL (TIDEL Neo) தகவல் தொழில்நுட்பம் ஈர்ப்பு, அதற்கு சலுகை எல்லாமே தொழில்துறையில் இருக்கிறது. எனவே, சரியான இடத்தில் கேட்டால், கையில் நிறைய வைத்திருக்கிறார்கள். கொடுப் பார்கள் என்று நினைக்கிறேன். அந்தந்தத் துறையில் கேட் டால், அந்தந்த வகையில் வரும். இந்தத் துறையில் அந்த உரிமைகள் இல்லை என்ப தைத் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன்.

**கோ. ஐயப்பன்:** 2006-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பின ராக நியமிக்கப்பட்டது முதல் நான் இந்த கோரிக்கையை வலி யுறுத்திக் கொண்டிருக்கின் றேன். கடலூர் மாவட்டம் மிக வும் பின்தங்கிய மாவட்டம். இது குறித்து, முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று, மாவட்டத் தலைநகர மாக இருக்கின்ற கடலூர் சட் டமன்ற தொகுதியிலே, ஆங்கி லேயர் காலத்திலிருந்து இராபர்ட் கிளைவ் அவர்கள் இந்தக் கடலூரை தலைநகரமா கக் கொண்டு செயல்பட்டார் கள் என்ற நிலைகளோடு, கட லூரிலே எந்தவிதமான தொழிற் சாலைகள், தொழில் பூங்காக்க ளும் சட்டமன்ற தொகுதியில் இல்லை. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நிறைய இருக்கின்ற காரணத்தால், கட லூரில் பயில்கின்ற மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில், ஏழை மாணவர்க ளுக்கு உதவிடும் வகையில் கட லூர் சட்டமன்ற தொகுதியிலே ஒரு சிறிய அளவிலாவது தொழிற் பூங்காக்களை அமைப் பதற்கு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தங் கள் வாயிலாக அமைச்சர் அவர் களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன்:** என் துறை யில் இல்லாத அதிகாரமோ, இல்லை திட்டமோ என்னால் செயல்படுத்த முடியாது என்ப தனால் உறுப்பினரிடம் நான் கூற வேண்டியது அவருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அனுதாபம் எனக்கு இருக்கிறது. ஆனால் எந்தத் துறையால் இதை செயல்ப டுத்த முடியுமோ அந்தத் துறை யில் அவர் கோரிக்கை வைத் தால், அருமை அண்ணன், இங்கே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கேட்டி ருக்கிறார்கள், அவர் மாவட் டத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கி றார்கள். தொழில் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் செய்து கொடுப்பார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடை பெற்றது.

---

## ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் – தமிழ்நாட்டில்

# ஊரகப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படுகிறதா?

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி

புதுடெல்லி, மார்ச் 24-

ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் - தமிழ்நாட்டில் ஊரகப் பகு திகளில் சுத்தமான குடிநீர் விநி யோகம் செய்யப்படும் குடி நீர் சுத்தமாக உள்ளதை ஒன்றிய அரசு உறுதி செய்யப் படுகிறதா என்று மக்களவை யில் திருவண்ணா மலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய ஜலசக்தித் துறை அமைச்சகத்திடம் அவர் எழுப் பிய கேள்விகள் வருமாறு:-

விநியோகிக்கும் குடி நீரின் தரம் குறித்து கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள பரிசோ தனைகள் பற்றி விளக்கமாக தெரியப்படுத்தவும். குடிநீரில் கலந்துள்ள குளோரைடு உள் ளிட்ட மாசுகளை கண்டறிய எடுக்கப்பட்ட அல்லது எடுக் கப்பட்டு வரும் நடவடிக்கை கள் என்ன ஜல்ஜீவன் திட்டத் தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால் ஊர கப்பகுதி மகளிர் மற்றும் குழந் தைகளின் உடல்நிலையில் தாக்கம் குறித்து விவரிக்கவும்.

ஜல்ஜீவன் திட்டம் அமல்ப டுத்தப்படுவதால் எந்த வகை யில் பாதிப்பிலிருந்து பெண் கள் தப்பி இருக்கிறார்கள்?

குடிநீர் பற்றாக்குறையுள்ள, வறட்சி நிலவும் பகுதிகளில் பிரச்சினைகளை தீர்க்க, ஜவஜீ வன் திட்டம் மூலம் மேற் கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன? குடி நீர் பற்றாக்குறையால் தவிக் கும் மக்களின் சவால்களாக இருக்கும் பிரச்சினைகளை தீர்க்க சிறப்பு உதவி ஏதாவது செய்யப்படுகிறதா? அப்படி எனில் அது குறித்து தெரிவிக் கவும்.

மேற்கண்டவாறு கேள்வி கள் எழுப்பிய சி.என். அண் ணாதுரைக்கு ஒன்றிய ஜவசக் தித்துறை இணை அமைச்சர் வி.சோமண்ணா அளித்துள்ள பதிலில், தமிழ்நாடு உள் ளிட்ட மாநிலங்களில் ஜல்ஜீ வன் திட்டம் செயல்பட ஒத் துழைப்பு கொடுத்து வருவதாகவும் அது பற்றி விரி வான விளக்கத்தையும் அளித் துள்ளார்.



காஞ்சி தெற்கு மாவட்டம் மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் மதுராந்தகத்தில் ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் நூருல் அமீன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், நகர செயலாளர் குமார், நகர மன்ற தலைவர் மலர்விழிகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.